DECEMBER 2023 **P/ID 35326/PTL4S**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு 50 சொற்களில் விடையளிக்க.

1. திருமுருகாற்றுப்படையில் முருகப்பெருமான் சூரனை எவ்வாறு தடிந்தான்?

2. 'நின் அளந்து அறிதல் மன்னுயிர்க்கு அருமை' என நக்கீரர் பாடுவதன் பொருளை எழுதுக.

3. 'நனந்தலை உலகம்' என முல்லைப்பாட்டு தொடங்குவதன் வழி புலனாகும் செய்தி யாது?

4. முல்லைப்பாட்டில் அரசனின் பாசறை எவ்வாறிருந்ததாகக் குறிப்பிடுகிறது?

5. 'குன்று கெழு நாடனை' என குறிஞ்சிப்பாட்டு யாரைக் குறிப்பிடுகிறது?

6. பட்டினப்பாலையின் பெயர்க்காரணத்தை எழுதுக.

7. 'வளம் தலை மயங்கிய நனந்தலை மருகின்' எனப் பட்டினப்பாலை குறிப்பிடுவது குறித்து எழுதுக.

8. திருமாவளவனது ஆற்றல் இரண்டனை பட்டினப்பாலை குறிப்பிட்டதன் வழி எழுதுக.

9. மாங்குடி மருதனார் ஞாயிறும் திங்களும் செய்யும் பணியாக எவற்றைக் குறிப்பிடுகிறார்?

10. ‘மைபடு பெருந்தோள் மழவர் ஓட்டியவன்’ என மதுரைக்காஞ்சி யாரைக் குறிப்பிடுகிறது?

11. வாடைத் துன்பத்தைக் கோவலர் எவ்வாறு எதிர் கொண்டதாக நெடுநல்வாடை குறிப்பிடுகிறது?

12. ‘வேண்டுவயின் திரிதர’ என நெடுநல்வாடை யாரைக் குறிப்பிடுகிறது?

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு 250 சொற்களில் விடைளிக்க.

13. திருப்பரங்குன்றத்தில் முருகப்பெருமான் வீற்றிருக்கும் அழகினை நக்கீரர் எவ்வாறு பாடியுள்ளார்?

14. திருவேரகத்தில் அந்தணர் வழிபடும் முறைகளை விளக்குக.

15. தலைவனது பிரிவால் தலைவி அடைந்த துயரத்தை முல்லைப்பாட்டு எங்ஙனம் புலப்படுத்துகிறது?

16. முல்லைப்பாட்டில் தோழி அஞ்சும் நிலையினை விளக்குக.

17. ‘வாரேன் வாழிய நெஞ்சே’ எனப் பட்டினப்பாலை பாடியுள்ளதன் அருமையினை எழுதுக.

18. பாண்டியனின் கொடைத்திறத்தை மதுரைக்காஞ்சி எங்ஙனம் எடுத்துரைக்கிறது?

19. நெடுநல்வாடையில் அந்தப்புரத்தின் அமைப்பு எவ்வாறு பாடப்பட்டுள்ளது?

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு, முறையே 500 சொற்களில் விடையளிக்க.

20. 'ஆல்கெழு கடவுள் புதல்வ' என நக்கீரர் முருகப்பெருமானைப் பாடும் நிலையினை விளக்குக.

21. முல்லைப்பாட்டில் இடம்பெறும் போர்க்களக் காட்சிகளை விரித்துரைக்க.

22. பட்டினப்பாலை குறிப்பிடும் வணிக நிலைகளை விளக்குக.

23. மதுரை மக்களின் சிறப்புகளை மாங்குடி மருதனார் எங்ஙனம் விரித்துரைக்கிறார்?

24. பாசறையில் அரசன் இருந்த நிலையினை 'நெடுநல்வாடை' எங்ஙனம் புலப்படுத்துகிறது?